27.09.2024

O.S.No. 271/2016

வா.சா.1.திரு.R.M.சுப்பிரமணியம், த.பெ.ராமநாதன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 1ம் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் 3ம் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 09.11.1998ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். (அது வா.சா.ஆ**.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) 1ம் வாதியின் பெயரில் உள்ள கணினி சிட்டா (அது வா.சா.ஆ**.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) 09.11.1998ம் தேதியிட்ட 2ம் வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம், சான்றிட்ட நகல். (அது வா.சா.ஆ**.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 2ம் வாதி பெயரில் உள்ள கணினி சிட்டா (அது வா.சா.ஆ**.4** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).05.01.2007ம் தேதியிட்ட எனது பெயரில் உள்ள கிரைய ஆவணம், சான்றிட்ட நகல் (அது வா.சா.ஆ**.5** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). எனது பெயரில் உள்ள கணினி சிட்டா. (அது வா.சா.ஆ**.6** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 1ம் வாதி எனக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரம் சான்றிட்ட நகல். (அது வா.சா.ஆ**.7** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 18.03.1993ம் தேதியிட்ட பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவணம் சார்பதிக நகல். (அது வா.சா.ஆ**.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 27.10.2016ம் தேதியிட்ட தினமலர் தினசரி நாளிதழ். (அது வா.சா.ஆ**.9** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). தாவா சொத்தைக் காட்டக்கூடிய புகைப்படங்கள் (7 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு (அது வா.சா.ஆ**.10** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 15.09.2016ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக இரசீதுகள் (5 எண்ணிக்கை) அசல். (அது வா.சா.ஆ**.11** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). பிரதிவாதிகள் தரப்பில், அனுப்பிய பதிலறிவிப்பு அசல். (அது வா.சா.ஆ**.12** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). நான் 07.08.2014ம் தேதியில், பிரதிவாதிகளுக்கு எதிராக காவல் துறையில் அளித்த புகார் மனு கையிருப்பு நகல். (அது வா.சா.ஆ**.13** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 01.12.2016ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவக நகல் மற்றும் அஞ்சலக இரசீதுகள்(5 எண்ணிக்கை) அசல் (அது வா.சா.ஆ**.14** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). மேற்படி, அறிவிப்புக்கான அஞ்சலக ஒப்புகை அட்டை(5 எண்ணிக்கை) அசல். (அது வா.சா.ஆ**.15** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** நிலஅளவையரின் வரைபடம் மற்றும் நீதிமன்ற ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(குறுக்கு விசாரணைக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)